மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கீழ் நீராறு அணையும், அதனோடு தொடர்புடைய சுரங்கப்பாதையும் கட்டுவதற்கு கேரள அரசின் இசைவு எதிர்ப்பார்க்கப்படுகிறது. இந்த சுரங்கப் பாதை 5 மைல் நீளமுள்ளதாக இருக்கும். கீழ்நீராறு அணை மூலம் ஆண்டொன்றுக்கு 2,500 மிலியன் கன அடி நீரைப் பயன்படுத்த தமிழக அரசுக்கு உரிமை உள்ளது. இந்நீரால் சுமார் 21,000 ஏக்கர் நிலங்கள் பயனடையும்.

Pilavukkal Project.

* 150. *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether actual excavation work has commenced on the Pilavukkal Project in Srivilliputhur Taluk;

(*b*) the present stage of the work : and

(*c*) when the work is expected to be completed ?

பிலவக்கல் திட்டம்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத்தில் பிலவக்கல் திட்டத்தில் மண் அகழ்தல் பணி ஆரம்பிக்கப்பட்டு விட்டதா ?

(இ) அப்பணியின் தற்போதைய நிலை யாது ?

(உ) எப்போது அப்பணி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) மண் அணை, ஆற்று மதகுகள், கால்வாய் மதகுகள் இவற்றை அமைக்கும் வேலை நடந்தேறி வருகிறது.

(உ) 1974-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் இத்திட்டம் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.